முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 705**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.09.2021, வெள்ளிக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கா வாழ்க
அண்ணலாக உலகமக்களை காத்திட
வரம்பெற்று என்பால் வந்த ஞான தேசிகனே வாழ்க
வாழ்த்தியே சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
இயம்பிடுவேன் பிலவ வேங்கை திங்கள் தன்னில்
கனிவேலவன் என் சக்தியாக வாழும்
கருணைமிக்க அரங்கன் திருவடிகள் பற்றி
3. பற்றியே உலகமக்கள் தொடர்ந்து வர
பரோபகாரம் என்கின்ற சிந்தை பெருகி
பற்றிய வினைகளை வென்று இனிதே
பாருலகில் ஞானவான்களாகி உயருவர்
4. உயர்வை தரவே அரங்கன் வழி ஆறுமுகன் யான்
உண்மை ஞானம் அருளி உலகோர்க்கு வழிகாட்ட
தயவான அரங்கன் தொண்டுவழியும் தர்மத்தின் வழியும்
தவறாது உலகோர் தொடர்ந்து கலந்து வருகவருக
5. வருகவே அவர்கள் நிலைமைகள் மாறி
வையகத்தில் மேல்நிலை பெற்று இனிதே
முருகப்பெருமான் என் அருள்துணை பெறுவதோடு
முழுமைஞானம் கண்டு சிறக்க நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கன் தர்மத்தில் உதவி
நீதிபிறழாவண்ணம் இனிதே சன்மார்க்க வழி
பெருமைபட உலகோர் தொடர்ந்து பங்காற்றிவர
பேராசான் அரங்கன் மூலம் இந்த உலகமாற்றம்
7. உலகமாற்றம் இனிதே சடுதி காணக்கூடும்
உண்மையான வழிகள் தொடர்ந்து மக்களுக்கு
பலமான அரங்கன் சக்திமூலமாக தீட்சையாக
பாடிடுவேன் தர்மமாக கலந்து இனிதே

8. இனிதே உலகமக்கள் அனைத்துபேரும்
இணையில்லாத ஞானிகளாகும் ஆற்றல்பெருக்கம் கூடி
துணைபட ஆறுமுகன் என்னருளும் சக்தியாக வர
திருவருள் கூடி உலகோர் பிறவா பெரும்பேறு காண்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–